
# தந்தை பெரியாரின் பெயர் நீக்கப்பட்டது அவமானம்!

# நாடாளுமன்றத்திலேயே கருத்துரிமையின் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளது!

## தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!


**சென்னை, டிச.13 -**

**நாடாளுமன்றத்தில் தந்தை பெரியாரை மேற்கோள் காட்டி கழக உறுப்பினர் எம்.எம். அப்துல்லா பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிடுகையில்,**

**நாடாளுமன்றத்தில் தந்தை பெரியாரின் பெயர் நீக்கப்பட்டது அவமானம், நாடாளுமன்றத்திலேயே கருத்துரிமையின் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளது. பெரியாரின் பெயரை எங்கும், எப்போதும், எந்தச் சூழலிலும் பயன்படுத்திக் கொண்டே இருப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார்.**

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**மாநிலங்களவையில் கழக உறுப்பினர் எம்.எம். அப்துல்லா உரையாற்றும்போது சுட்டிக்காட்டிய தந்தை பெரியாரின் மேற்கோளுக்கு பா.ஜ.க.வினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்; பெரியாரின் பெயரும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.**

**நாடாளுமன்றத்திலேயே கருத்துரிமையின் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளது!**

**மண்டல் ஆணையப் பரிந்துரையை அமல்படுத்திய போது தந்தை பெரியார்தான் இதற்குக் காரணம் என்று பிரதமர் வி.பி.சிங் பேசிய நாடாளுமன்றத்தில் தந்தை பெரியார் பெயர் நீக்கப்பட்டுள்ளது அவமானம்!**

**மக்களின் மனங்களில் நிலைத்து நின்று, வகுப்புவாதிகளை இன்றளவும் அச்சுறுத்தும் தந்தை பெரியாரின் பெயரை எங்கும் எப்போதும் எந்தச் சூழலிலும் பயன்படுத்துவோம்! அனைவரும் பயன்படுத்துங்கள்!**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆத்தூர் தொகுதியில் ஊரக வளர்ச்சி துறை சார்பாக

# அனைத்து நலத் திட்ட உதவிகளும் நூறு சதவீதம் நிறைவேற்றப்பட்டு வருகிறது!

## ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!



*திண்டுக்கல், டிச.13-*

ஆத்தூர் தொகுதியில் ஊரக வளர்ச்சி துறை சார்பாக தார்ச்சாலை, பேவர் பிளாக் கற்கள் சாலை, தெரு விளக்கு வசதி, வடிகால்வசதி உட்பட அனைத்து நலத் திட்ட உதவிகளும் நூறு சதவீதம் திராவிடமாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆத்தூர் மற்றும் ரெட்டியார் சத்திரம் ஒன்றியங்களைச் சேர்ந்த கிராம மக்கள் கோரிக்கை மனுக்களை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரிய சாமியிடம் கோரிக்கை மனுக்களை கொடுத்து தீர்வு பெற்றனர். கிராம ஊராட்சிகளில் கணினி இயக்குநர் பதவிக்கு தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஊராட்சி மன்ற தலைவர்களுடன் நேரில் வந்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர்.

அதன்பின்னர் ஊராட்சி மன்ற தலைவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் கிராமங்கள் நகரங்களுக்கு இணையாக மேம்பட்டுவருகிறது. இதன் மூலம் நகரங்களில் கிடைக்கும் அனைத்துப் பொருட்களும் கிராமங்களில் கிடைக்கும் அளவிற்கு கிராமங்கள் முன்னேற்றம் அடைந்து வருகிறது. 100நாள் வேலை திட்டம் மூலம் கிராமங்களை மேம்படுத்த கூடிய பணிகள் ஆய்வு செய்யப்பட்டு விரைவில் கிராமங்களை மேம்படுத்த நலத் திட்ட பணிகள் நடைபெற உள்ளது. முதல்கட்டமாக முதுல்வரின் கிராமப்புறச் சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு செல்லும் சாலைகள் புதுப்பிக்கப்பட்டு வருவதால் கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுவதோடு கிராமங்களும் முன்னேற்றம் அடையும் என்றார்.

அனைத்து கிராமங்களிலும் அங்கன் வாடி மையங்கள், நியாயவிலைக்கடைகள் புதுப்பிப்பதோடு புதிய அங்கன்வாடி மையங்கள், நியாயவிலைக்கடைகள், தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டு வருவதால் பள்ளிகளில் மாணவர்களுக்கு பாதுகாப்பான கல்வி கிடைப்பதோடு கிராமங்களில்வசிக்கும் மக்களுக்கு தங்குதடையின்றி ரேஷன் பொருட்கள் கிடைத்து வருகிறது என்றார்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாநில வர்த்தகர் அணி இணைச்செயலாளர் ஜெயன், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவருமான ப.க.சிவகுருசாமி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வீரா. சாமிநாதன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல்முருகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முரு கானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம் பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன்,

மாவட்ட தகவல்தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப் பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப் பட்டி அருண், ஸ்ரீராமபுரம் பேரூராட்சிமன்ற தலைவர் சகிலாராஜா, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்த கோபால், துணைத்தலைவர் ஜெயபால், ஊராட்சி மன்ற தலைவர்கள் அனுமந்தராயன்கோட்டை இன்பராஜ், கரிசல்பட்டி பால்ராஜ், அம்மாபட்டி ரவி, கோனூர் வெள்ளைத்தாய் தங்க பாண்டியன், ஒன்றியகுழு உறுப்பினர்கள் சுமதி கணேசன், கோனூர் திருப்பதி, நாகலெட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஆனந்த், ஜான்பீட்டர், மாநகர பிரதிநிதி நரசிங்கம், தி.மு.க. நிர்வாகி நந்தி நடராஜன், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## புதுக்கோட்டையில் வீட்டு மனைபட்டா வழங்கல்

*புதுக்கோட்டை, டிச.13-*

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், நச்சாந்துப்பட்டி ஸ்ரீ உமையாள் திருமண மண்டபத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், 153 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 10.12.2023 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா, தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் த முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத்தலைவர் மேகலாமுத்து, ஒன்றியக் குழு உறுப்பினர் அழகு(எ) சிதம்பரம், வட்டாட்சியர் புவியரசன், ஊராட்சிமன்ற தலைவர் சிதம்பரம் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர், ஆலந்தலை தெற்கு தெருவைச் சேர்ந்த ஜூலியஸ் மகன் ரவிஸ்டன் (30) கடந்த டிச. 9ம் தேதி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது ராட்சத அலை மோதி தவறி விழுந்து உயிரிழந்தார். இந்நிலையில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். அப்போது மீன்வளத்துறை சார்பில் ரூ. 2 லட்சம், தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ. 1 லட்சம் என ரூ. 3 லட்சம் நிதி உதவியை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழங்கினார். நிகழ்வின் போது சில்வஸ்டர், வாமனன், புஸ்ரா, ஜெகன், ராமகிருஷ்ணன், ஆசைதம்பி, சுவைக்கின், உறுப்பினர் லெவி, கவுன்சிலர்கள் மஞ்சுளா தொம்மை, ஆனந்த ராமச்சந்திரன், தினேஷ் கிருஷ்ணா, உமரிசங்கர், செங்குழி ரமேஷ், ஜெபமாலை, லெனின், ரெம்சியூஸ், சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இதுவரை ரூ.5 கோடியே 89 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மருத்துவம் - கல்வி உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்–பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 89 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/-**(இரண்டு லட்சம்) **12-12-2023** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | |
|---|---|
| 1.கே.மணியரசன் (எ) சுப்பிரமணியன், ந.கோவில்பட்டி, நத்தம், திண்டுக்கல் | 25,000/– |
| 2.ச.தங்கவேல், கோவிலாங்குளம், கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம். | 25,000/– |
| 3.எஸ்.செல்வம், வார்டு–5, சுப்பாராயர் தெரு, வத்திராயிருப்பு, விருதுநகர் | 25,000/– |
| 4.எஸ்.மாரிமுத்து, பீச் ரோடு, அன்னைசிவகாமி நகர், எண்ணூர், சென்னை–57 | 25,000/– |
| 5.எஸ்.வி.சிவலிங்கம், ஏ.ஜே.பிளாக், பல்லக்குமாநகர், மயிலாப்பூர், சென்னை–4 | 25,000/– |
| 6.ஏ.சி.மணி, ஊராட்சி செயலாளர் பட்டாபிராமாபுரம், திருத்தணி, திருவள்ளூர். | 25,000/– |
| 7.திருமதி ச.ஜோதி, சுந்தரம்பள்ளி கிராமம், திருப்பத்தூர் – 635 654. | 25,000/– |
| 8.திருமதி வி.மல்லிகா,மெயின் ரோடு, வீராஞ்சேரி, துரும்பூர்,பாபநாசம், தஞ்சை | 25,000/– |
| **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

## ரூ.41 லட்சம் லஞ்சம் வாங்கி கைதான

# அமலாக்கத்துறை அதிகாரிக்கு 2 நாள் போலீஸ் காவல்!

## திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி

*மதுரை, டிச.13-*

41 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கி கைதான அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியை 2 நாள் காவலில் எடுத்து விசாரிக்க லஞ்ச ஒழிப்புத் துறைக்கு திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

மதுரை அமலாக்கத்துறை அலுவலகத்தில் பணியாற்றி வந்த அதிகாரி அங்கித் திவாரி, திண்டுக்கல் மருத்துவரிடம் வழக்கு ஒன்றில் இருந்து விடுவிப்பதாகக் கூறி, 2 தவணைகளாக 41 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றார். முதல் தவணையாக 20 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்ற அவர், 2வது தவணையாக 21 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கிய போது தமிழ்நாடு காவல் துறையின் லஞ்ச ஒழிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இதனை அடுத்து அங்கித் திவாரியை திண்டுக்கல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறையினர் பின்னர் சிறையில் அடைத்தனர். இந்நிலையில், நீதிமன்ற காவலில் சிறையில் இருந்த அங்கித் திவாரியை 2 நாள் காவலில் எடுத்து விசாரிக்க லஞ்ச ஒழிப்புத்துறைக்கு திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

## கடலில் மீன்பிடித்தபோது ராட்சத அலைமோதி தவறிவிழுந்து

# உயிரிழந்த ஆலந்தலை ரவிஸ்டன் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதிஉதவி!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் வழங்கி ஆறுதல்!

*திருச்செந்தூர், டிச.13-*

திருச்செந்தூர்ஆலந்தலை தெற்கு தெருவைச் சேர்ந்த ஜூலியஸ் மகன் ரவிஸ்டன் (30). கடந்த டிச. 9ம் தேதி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது ராட்சத அலை மோதி தவறி விழுந்து உயிரிழந்தார். இச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் மீன் வளம், மீனவர் நலன் மற்றும் கால் நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு நேற்று முன்தினம் மாலை நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

அப்போது மீன்வளத் துறை சார்பில் ரூ. 2 லட்சம், தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ. 1 லட்சம் என ரூ. 3 லட்சம் நிதி உதவியை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

நிகழ்வின் போது ஆலந்தலை பங்குத்தந்தை சில்வஸ்டர், திருச்செந்தூர் வட்டாட்சியர் வாமனன், மீன்வளத் துறை உதவி இயக்குனர் புஸ்ரா, ஆய்வாளர் ஜெகன், சார் ஆய்வாளர் ராமகிருஷ்ணன், ஆலந்தலை ஊர் நலக்கமிட்டி தலைவர் ஆசைதம்பி, பொருளாளர் சுவைக்கின், உறுப்பினர் லெவி, கவுன்சிலர்கள் மஞ்சுளா தொம்மை, ஆனந்த ராமச்சந்திரன், தினேஷ் கிருஷ்ணா, திமுக வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரிசங்கர், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் செங்குழி ரமேஷ், ஒன்றிய பொருளாளர் பரிசமுத்து, மாவட்ட கவுன்சிலர் செல்வகுமார், நகர செயலாளர் வாள் சுடலை, மீனவர் நலவாரிய உறுப்பினர்கள் ஜெபமாலை, லெனின், மீனவரணி மாவட்ட துணை அமைப்பாளர் ரெம்சியூஸ், அமலிநகர் வார்டு செயலாளர் சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மழைநீர் வடிகால் துறை**

கலைஞர் 100 1924 - 2023

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/0527/2023

**இரு உறை குறுகிய கால முறையில்**
**மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் மதிப்பு (with GST 18%) | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தாரர் வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 1, 4, 9 மற்றும் 12 ல் உள்ள பல்வேறு நீர்வழி கால்வாய்களை மேம்படுத்தும் பணிகள் (3 சிப்பங்கள்) | ரூ. 846.30 முதல் ரூ.2345.43 இலட்சம் | பணியின் மதிப்பில் 1% | முதல் வகுப்பு |

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் **04.01.2024 மாலை 3.00 மணி**
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் **https://tntenders.gov.in**
3. ஒப்பம் திறக்கும் நாள் **05.01.2024** மற்றும் நேரம் **3.30 மணி**

செ.ம.தொ.இ / 6596 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்பு பொறியாளர் / ம.நீ.வ.து**





உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், சிக்கமநாயக்கன்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற விழாவில், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் மரக்கன்றுகள் நடவு செய்வதற்காக பாரத ஸ்டேட் வங்கி சார்பில் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியில்(சிஎஸ்ஆர்) இருந்து வழங்கிய ரூ.2.00 கோடி நிதியை பெற்றுக்கொண்டார். அருகில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் திருமதி மு.அய்யம்மாள், திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், பாரத ஸ்டேட் வங்கி பொது மேலாளர்(வணிக வாடிக்கையாளர்கள் குழுமம்) ஆர்.ஆனந்தகணேசன், பாரத ஸ்டேட் வங்கி பொதுமேலாளர்(விரிவாக்கம்2) கோவிந்த் நாராயண் கோயல், இந்தியன் ஆயில் கார்பரேசன் நிறுவன பொதுமேலாளர் ராஜேந்திரா, மேலாளர்கள் தயேந்திரா, நஷிம் பாஜ், சரவணன், நிகிட், சுமித் உட்பட பலர் உள்ளனர்.